VISIT…

யுகபாரதி

கரகாட்டக்காரி

ஆடுகிறாள் அம்பலத்தில்
ஆதிசிவன் சிரிப்போடு
காலக் கயிறுகள்
சுழற்றுகிற பம்பரம் போல்
தலைக்கு மேலிருக்கும்
பித்தளை பூங்கரகம்
இடுப்புப் பாவாடையோ
பிழைப்பு ராட்டினம்

மேடையில்லா சேரிகளின்
மேல் நின்று ஆடுகிறாள்
கோவிலில்லா சாமிகளின்
கொடை நாளை கௌரவிக்க
வாணி வழிய வழிய
வந்து நிற்கும் பெருசுகளின்
கோணல் பார்வைக்கு
கொடுக்கிறாள் சவுக்கடியை
நையாண்டி மேளங்கள்
நட்டென்று ஓலிஎழுப்ப
சலங்கை சிரிக்கிறது
சாவு வீட்டு முற்றத்தில்

வேர்வை வருவதற்குள்
விடைபெறும் பரதத்தை
வேர்வை வழிய வழிய
விரட்டுகிறாள் கோபத்துடன்
இஞ்சி இடையழகு
இங்குண்டு பாரென
கொஞ்சி அழைக்கிறாள்
குடிகாரக் கூட்டத்தை
ஏங்கி அழுவதில்லை
இவளுடைய சிருங்காரம்
நாங்கள் ஓசத்தியென்று
நடிப்பதில்லை ஒரு நாளும்
வெட்ட வெளி மீது
வெறியோடு ஆடுகிறாள்
பட்ட துயர் தீர
பசியோடும் ஆடுகிறாள்
அவிழுமா கொக்கியென
ஆடவர் பார்த்திருக்க
கிடைக்குமா பத்து ரூபாய்
கேட்கிறது இவள் ரவிக்கை.

துணை நடிகை



அவ்வப்போது செய்திகளில்
அழகியாகி விடுகிறவள்
அவமானம் பொறுக்காமல்

அழுதுவிழி கருகுபவள்

குத்துகின்ற ஆசைகளை
கொஞ்சம் போல சிந்துபவள்
செத்தொழிய மாட்டாமல்
சிறுக சிறுக பிந்துபவள்

தங்கையாய் இவள் நடித்தால்
கற்பழிப்பு காட்சிவரும்
வில்லன் விரட்டுகையில்
விழவேண்டும் முட்புதரில்

சிணுங்கும் நாயகியின்
சிறப்புகளை ஓதுதற்கு
போகவேண்டும் நடிகனிடம்
பொறுப்புமிக்க தோழியாக

இவள் வீட்டுப் பாத்திரத்தில்
சிலநாளே சுடுசோறு
என்றாலும் நடிக்கின்றாள்
திரைப்படத்தில் பலவாறு

பந்தயக் குதிரையாகும்
பாக்கியத்தை விட்டதனால்
சந்தடி ஏதுமின்றி
சருகாக உதிருகிறாள்

தரமான தவறுகளே
வருமானம் என்றாக
பொழுதெல்லாம் பூசுகிறாள்
கலையாத அரிதாரம்

இதற்குத்தான் ஆடுகிறேன்
என்பது போல் இடையாடும்
மறைப்பதற்கு துணியிருந்தும்
ரசிக மனம் களவாடும்

வயிற்றுக்கு மிகநெருங்கி
வருகின்ற காமிராவில்
தெரியாது இவள் பசியும்
தெய்வத்தின் வஞ்சகமும்.

போஸ்டர் ஒட்டுபவன்



ஊரடங்கும் நள்ளிரவில்
ஓட்டுகிறான் சுவரொட்டி

தான் மட்டும் உறங்காத
தகவலையும் தெரிவிக்க

நட்டநடு நிசிப் பொழுதில்
நடமாடும் பேய் போல
ஓட்டுகிறான் காகிதத்தை
ஒவ்வொருவரும் பார்ப்பதற்கு

திக்கேதும் தெரியாமல்
திணறுகின்ற தன் வாழ்வை
முக்குச் சந்துகளில்
மூச்சுமுட்ட ஒட்டுகிறான்

ஊரோடு ஒட்டி வாழ்தல்

உயர்வெனும் தத்துவத்தை
ராவோடு ராவாக
நடைமுறைப் படுத்துகிறான்

வெட்டிக் கதைபேச
விழாவெடுக்கும் மனிதர்களின்
கட்டளைக்கு அடிபணிந்து

கஷ்டத்தை ஓட்டுகிறான்

நீச்சல் உடையணிந்த
நிர்வாண அழகிகளை
கூச்சம் ஏதுமின்றி
கொஞ்சிடாமல் ஓட்டுகிறான்

இன்றோடு கடைசியென

துன்பத்தை நினைத்தவாறு
அன்றாடம் ஓட்டுகிறான்
அகலாதக் கனவோடு

ஓட்டாமல் இருப்பவர்கள்
உலவுகின்ற வீதிகளில்
ஓட்டுவதால் இருக்கின்றான்
உண்மைகளை கிழிக்கின்றான்

இண்டு இடுக்கெல்லாம்
இருக்குமிவன் கைரேகை
கண்டு செல்பவர்கள்
காண்பதில்லை கண்ணீரை.

பூக்காரி
_____

கற்றது கையளவு
என்பதிவள் கோட்பாடு
வற்றிய முகத்தோடு
வாழ்ந்துவரும் பூக்காடு

காம்புகிள்ளி காம்புகிள்ளி
காய்த்துப்போன கைவிரலை
சோம்பல் நாரெடுத்து
சொடக்கிற்குள் முடிந்துவைப்பாள்

ஆலய வாசல் முன்பே
அனுதினம் இருந்தாலும்
சாமிகள் இவளுடைய
சங்கடத்தைத் தீர்ப்பதில்லை.

வெகுவான வாசனையை
வீடுவீடாக கொடுத்துவிட்டு
சாராய நெடியடிக்கும்
புருஷனிடம் சரணடைவாள்

வாங்குபவள் கை பார்க்க
வழங்குபவன் இடை பார்க்க
ஏங்கிடும் இவள் முகத்தை
யாருமே பார்ப்பதில்லை

முல்லைப்பூ வாங்க வரும்
முப்பது வயதுக்காரன்
சில்லறை தருவது போல்
சிலசமயம் விரலுரச

கல்லறைப் பூவாவாள்
கவலைக்குத் தாயாவாள்
தொல்லைதான் என்றாலும்
தொடருவாள் மறுபடியும்

எந்தப் பூ உதிராதென
என்றுமிவள் சொன்னதில்லை
வந்துபோகும் காதலரை
வாய்மலர வம்பிழுப்பாள்

வகைக்கொரு பூப்பறித்து
வருபவர்க்குக் கொடுத்தாலும்
இவளுக்கு இதுவரைக்கும்
எவருமில்லை பூ கொடுக்க.

தெருவாசகம்

உதவி இயக்குநர்
———————————

படமெடுக்கத் துடிக்குமவன்
பஞ்சத்திலும் சிரிக்கிறவன்
தடம்பதிக்க விரும்புவதால்
தொந்தரவை ருசிக்கிறவன்

நடைமுறையில் இருளோடு
இவன் வாழ நேர்ந்தாலும்
படச்சுருளின் வெளிச்சத்தில்
இதயத்தைக் கடத்துபவன்

இலவம் பஞ்சைப் போல்
மேல்நோக்கும் கற்பனைகள்
நிலவின் ஒளிபோல
கீழிழுக்கும் சங்கடங்கள்

விரிக்கப் பாயின்றி
வெறுந்தரையில் உருளுகிறான்
கொறிக்கப் பழைய படம்
விழித்திரையில் பருகுகிறான்

எழுதும் திரைக்கதையில்
எத்தனையோ திருப்பங்கள்
அழுகை பாம்பு கொத்தும்
பரமபத இறக்கங்கள்

பிரசவிக்கும் வலியுணரா
தலைப்பிள்ளைகாரி போல
திரையரங்க மணிச்சத்தம்
கேட்குமிவன் நாடியில்

மழிக்காத தாடிமுடி
மலர்ச்சிக்கு அடையாளம்
அலுக்காத தேடலுடன்
அலைகின்றான் தினந்தோறும்

பாழடைந்த கண்ணிமையில்
படுத்திருக்கும் எதிர்காலம்
கூன்விழுந்த புன்னகையில்
கொண்டிருப்பான் தவக்கோலம்

அளந்த கனவெல்லாம்
அழகான படமாகும்
இழந்த இளமை மட்டும்
அணைந்து போன சுடராகும்.

மின் கணக்காளன்
––––––––––––––––––

உறைந்த பனித்துளியின்
உள்வெப்பம் உணர்வதுபோல்
எரிந்த விளக்கொளியை
எழுதுகிறான் கணக்கிட்டு

காட்டுகின்ற தொகை மட்டும்
கட்டினால் போதுமென்பான்
மீட்டருக்கு மேல் கேட்டு
நிற்பதில்லை தலை கவிழ்ந்து

ஆள்வோரின் கணக்கெல்லாம்
அடிவயிற்றில் நெருப்பு வைக்க
கணக்காளும் இவன் விழியில்
பூஜ்ஜியமாய் கருவளையம்

ஆண்டு பலவாக
அடைபட்ட வீடுகளைத்
தாண்டும் தருணத்தில்
தத்தளிப்பான் தனக்குள்ளே

எந்திரங்கள் மிக நிறைந்த
எவர்வீட்டுக் குள்ளேயும்
முந்தி நிற்கும் சங்கடத்தை
மூடியிட்டுத் திரும்புகிறான்

சீந்துவார் யாருமின்றி
சிலந்தி வலைபடிந்து
நைந்திருக்கும் குறிப்பு அட்டை
நவிலுமிவன் சூழ்நிலையை

அணையா குழல்விளக்கு
ஆர்ப்பரிக்கும் நகரத்தில்
தூண்டா மணிவிளக்காய்
தொடருமிவன் கரசேவை

ஓட்டிக்கொண்ட ஓட்டடையை
உதறுகின்ற நேரத்தில்
கட்டணத்தை கிறுக்குமிவன்
கைவலியைக் குறிப்பதில்லை

எண்ணுவதைத் துணிவதுதான்
கருமமெனச் சொன்னாலும்
எண்ணியெண்ணி தணியுமிவன்
எண்களின் நாற்காலி.
எ.பி.க.
உயிர் பிரிந்து ஊர்ந்தோடி
நீர் தேடிக்
கொணர்ந்தது வேர்
பாராட்டும் கண்களில்
பூ மட்டும்
\ஆதவன்

யுகபாரதி

பலூன்காரன்
––––––––––––––

மாதக் கடைசியில்லை;
மாதமெலாம் கடைசி என்று
ஊதிப் பெருக்குகிறான்
உள்ளிருக்கும் வேதனையை

ஓதுவதால் ஆய பயன்
ஒன்றுமில்லை என அறிந்து
ஊதுகிறான் ஓயாமல்
உயிர்மூச்சை விற்பதற்கு

காற்றைச் சிறைவைக்க
இயலாது என்பவரின்
கூற்றைப் பொய்யாக்கிக்
காட்டுகிறான் உண்மைகளை

குழலூதும் கண்ணன்போல்
கோபியரை நாடாமல்
குழந்தைகளைத் தேடுமிவன்
குறிக்கோளில் குற்றமில்லை

இடைவிடாது இவனூதி
எடுத்துவரும் ரூபாயில்
அடுப்பூதத் தொடங்குமவன்
அரைவயிற்றுப் பட்டினிகள்

காயமிது பொய்யென்பார்
காற்றைடைத்த பையென்பார்
ஓயும்வரை இவன் உதடும்
உரைக்குமந்த மந்திரத்தை

வெளியே பெரியதுபோல்
விழிகளுக்குத் தெரிவதெலாம்
அழிவை எதிர்நோக்கும்
அகம்பாவம் போலென்பான்

வண்ணம் யாதெனினும்
வடிவம் வேறெனினும்
எண்ணம் பிசகிவிட்டால்
எதுவுமிங்கு வீணென்பான்

ஆசைகளால் பருத்தவர்கள்
அடையத் துடிப்பதெலாம்
ஊசிமுனை துரோகத்தில்
உடையக் கூடும் என

பேசுகிற இவனுக்குள்
பிரியங்கள் பலியாடு
பூசலுக்குள் வாழுவதால்
தேசத்தின் குறியீடு.

யுகபாரதி

போக்குவரத்துக் காவலர்
––––––––––––––––––––––

இருக்கிற செல்வமெலாம்
இழந்துவிட நேருகையில்
தெருவுக்கு வந்ததாக
தேம்புவார் மனசொடிந்து

இருப்பது தெருவெனினும்
இவனிதயம் பதைப்பதில்லை
உருக்குகிற வெயிலெடுத்து
உடுத்துகிறான் உளமாற

மேகமழை உண்டுவாழும்
சக்ரவாகப் பறவை போல்
வாகனத்துப் புகை உண்டு
வாழுமிவன் ஆண் பருந்து

கோட்டுக்குள் நிற்காமல்
முன்னேறத் துடிப்பவரை
சீட்டெழுதி தண்டிக்கும்
தெருவோர ஈசனிவன்

வேலைக்குப் போவதாக
வீடுவிட்டுக் கிளம்பினாலும்
சாலைகளே இவனுக்கு
சபையாகும் அரசோச்ச

பூர்வீக சாபத்தை
புறமொதுக்க வழியின்றி
தார்ச்சாலை மீது தினம்
தகித்திருப்பான் வழிகாட்ட

செவிப்பறை மோதுகின்ற
ஹாரன் சப்தத்தில்
தவிப்புடன் விலக்குகிறான்
தன்வீட்டு நெரிசலையும்

அடுக்கில்லா வேகத்தில்
அலைபாயும் ஊர்திகளை
தடுத்துப்பின் நெறிப்படுத்தும்
நடுத்தெரு நெசவாளன்

இடதென்றும் வலதென்றும்
இலக்கின்றி பாதைகளை
கடந்துசெல்லும் ஆணவத்தை
கடிந்துரைக்கும் இவன்நாக்கு

கண்ணிமைக்கும் சமயத்தில்
கனவுவந்து ஸ்தம்பிக்கும்
முன்நிமிர்ந்து ஞானம்பெற
மூவிளக்கு போதிமரம்.

யுகபாரதி

சித்தாள்
––––––––––

கருப்பையைக் கத்தரித்த
கன்னியரை நாமறிவோம்
இரைப்பையே இல்லாமல்
இருப்பாரா யாரேனும்?

கல்லிருக்கும் அரிசியெனில்
களைவதிலே தவறில்லை
கல்லுடைத்து அரிசி வாங்கும்
கதையிங்கு யார் பிழையோ?

மாதங்கள் பத்து மட்டும்
மடியிலே சுமந்துவிட்டு
போதுமடா சாமி எனப்
புலம்புகிற பெண்ணினத்தில்

தனதுயிர் வற்றும்வரை
தலையிலே சுமைதாங்கி
மனக்குறை முடியாமல்
மண்டியிடும் இவள் வறுமை

வீடுகட்ட மணலள்ளி
விரைகின்ற போதுமிவள்
பாடுபட்ட சுவடுகளைப்
பதிப்பதில்லை எதன் மீதும்

தொப்புள் கொடியறுத்து
துண்டித்த குழந்தைகளைக்
கப்பிக்கல் உடைத்தேனும்
காப்பாற்றும் ஆதித்தாய்

நிமிண்டும் பசியோடு
நிம்மதியும் காணாமல்
சிமென்ட்டுப் பாலுண்ணும்
சிசுபோல இவள் மேனி

உடலழகை மூடுதற்கே
உடுத்துவார்கள் புடவையை
படருமிவள் முந்தானையோ
பாரமேற்கும் சும்மாடு

ஆஸ்திபோல் அவஸ்தைகள்
அம்பெறிந்து போனாலும்
மேஸ்திரிக்கு முன்னிவளோ
மெலிந்து நிற்கும் வில்லாக

திட்டுவாரோ என பயந்து
தோலுரியும் சிராய்ப்புகளை
கட்டுமானக் கலவையோடு
கரைந்துவிடும் உடல்கம்பி

யுகபாரதி

மேஜை துடைப்பவன்
_____

இறைந்திடும் பருக்கை தொட்டு
எடுக்கிற இவனின் கையோ
நிரந்தர அழுக்கை மட்டும்
நெருங்கவும் முடிவதில்லை

சுத்தமே சோறு போடும்
சொல்வது சரிதான் போல
சத்திய வடிவைக் கண்டால்
சக்கையில் சலவைக் கோயில்

எச்சிலை எடுக்குந் தோறும்
எதிர்ப்படும் வசவு யாவும்
சச்சர வென்ற சொல்லின்
சம்பந்தி ஆவதுண்மை

வருபவர் கொடுத்துப் போகும்
வரவிலே கெட்ட வார்த்தை

பொருமலில் விரியும் கண்ணுள்
பொசுங்கிடும் வெப்ப வாடை

துடைப்பது வேலை; ஆனால்
தொடர் நிகழ் வாகிப்போன
படைப்பெனும் பாசி மீது
படிவதோ சோகத் தூசி

குப்பியில் அடைத்துவைத்த
கொடுமைகள் என்பதே போல்
எப்பவும் வேர்க்குந் தேகம்
எரிதழல் அட்சதைகள்

சாப்பாட்டு நாற்காலிக்கும்
சண்டைகள் நடப்பதுண்டு
ஏப்பமிட இடம்பிடிப்போர்
இவனுக்கு ஆளும் கட்சி

கல்லாவில் அமர்ந்திருந்தால்
கடவுளும் சைத்தானென்று
சொல்கிற நாக்குக்குள்ளே
சுழல்வது குமட்டல் பூமி

வயிற்றுக்கு அடித்துக்கொள்ளும்
வாழ்வுதான், என்ற போதும்
கயிற்றின்மேல் நடக்கும் இவனோ
கலியுக சுத்தானந்தம்.

தெருவாசகம்

ரயில் பாடகன்
_____

பின்வாசல் துளசி மாடம்
பேருந்தில் ஜன்னல் ஓரம்
என்பதுபோல் இவனின் பாடல்
எல்லார்க்கும் விருப்ப விருந்து

அன்னையர் பாடும் பாடல்
உறங்கினால் அணைந்து போகும்
அன்பிதழ் பாடும் பாடல்
அணைப்பிலே அதிகமாகும்

ஒன்பது வாசல் கீறி
உட்புகும் இவனின் பாட்டோ
உண்மையில் இறுதி வரை
உரையாடும் செல்களோடு

உப்பாத வயிற்றுத் திடலில்
உரைபடும் பசியின் பாட்டை
துப்புகிறான் செவிகள் கேட்க
தெவிட்டாத விதியின் வேட்டை

குரலினிது எனப் புகழ்ந்து
கொடுக்கின்ற சில்லறையில்
இருமலுக்கு மருந்து வாங்கும்
இன்னலிசை ஏழுஸ்வரம்

சரணங்கள் முடிந்த பின்பு
சரணடையும் பல்லவி போல்
நரம்புக்குள் இவனுமொரு
நடமாடும் நாகஸ்வரம்

துளையிட்ட மூங்கில் வீட்டில்
துயில்கின்ற ராகமெல்லாம்
களைவெட்டும் என்பதே போல்
கதறுகிறான் கருணைக்காக

தண்டவாள ஜெயிலுக்குள்
தடதடக்கும் துயருக்குள்
என்றேனும் விடியாதா
எனக்கேவும் ரயில் சேவல்

இட்டவர் பிச்சையென்பார்
இடாதவர் கொச்சையென்பார்
பட்டதைப் பாடிச் சென்றால்
பாவம்போல் விலகிச் செல்வார்

நிறுத்தங்கள் வந்தால் கூட
நிற்காமல் அலையும் பாடல்
தரித்திரத்தை வெல்வதுண்டு
தலைகுனிவைச் சொல்வதில்லை

யுகபாரதி

அடகுக் கடைக்காரன்

என்னிடம் இருப்பவைகள்
ஏழையின் புன்னகைகள்
என்பதை உரக்கச் சொல்லும்
இவனொரு வேர்வை வேடன்

கம்மலுக்கு வட்டியாக
காதினை வாங்கிக்கொண்டு
விம்மலைக் கொடுத்தனுப்பும்
விசித்திர உதவிக்காரன்

மோதிரக் கையால் குட்டு
வாங்குதல் மகிழ்ச்சி என்பார்
மோதிரமே குட்டும் என்னும்
மூர்க்கமே இவனின் லாபம்

சிலம்பால் மக்கள் கூட்டம்
சீரழிந்த மதுரைச் சாம்பல்
தழும்பை தோலாய் மாற்றி
தருவிக்கும் அவலத் தோப்பு

தங்கிய அழுக்கையெல்லாம்
தன்னிடம் வைத்துக்கொண்டு

தங்க நகை முழுகிட்டென்று
தெரிவிப்பான் தகவல் மட்டும்

கஷ்டங்கள் நேரில் வந்து
கதவினைத் தட்ட; இவனோ
குஷ்டத்தை போல பார்த்து
குறுக்குவான் மேலும் நோக

தோடுகள் அணியச் செய்த
தோதான துவாரம் பார்த்து
கேடெனும் கலப்பை யாலே
கிறுக்குகிறான் மகசூலுக்கு

கற்பனை கணக்கையிட்டு
கழிக்கிறான் மானுடத்தை
தற்கொலை சாவுக்கென்றும்
தாயகம் தானே என்பான்

எக்கடன் யார் யார் கை
ஏற்பினினும், இவனிடத்தில்
சிக்கினால் சிக்கல் நேரும்
சிந்தனை மக்கிப் போகும்

கழுத்திலே கிடக்கும் செயினை
கடன்கேட்டு அடகு வைத்தால்
கழற்றிய பிறகும் இவனால்
கனக்கிறது; கருக்கிறது; அறுக்கிறது.